DCP

**சுருக்கம்**

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சாலைகள் ஊராட்சிச் சாலைகள் – தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைத்தல் – திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம் – குண்டூர் மற்றும் நவல்பட்டு ஊராட்சிச் சாலைகள் பராமரித்தல் மற்றும் மேம்பாடு செய்தல் – நெடுஞ்சாலை துறைக்கு மாற்றம் செய்து — நிதி ஒப்பளிப்பு அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.பி2) துறை

அரசாணை (நிலை) எண்: 137 நாள்:13-12-2011

16/12/11

படிக்க

தலைமைப் பொறியாளர் (பொது) கடித எண்.44348/சாலை3/2008, நாள் 18–08–2009.

---

**ஆணை:-**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், நவல்பட்டு கிராமத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்க அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது, இப்பூங்கா அமையவுள்ள இடத்தில் உள்ள பஞ்சாயத்து சாலையை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி பராமரிக்க வேண்டும் என எல்காட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் குண்டூர் மற்றும் நவல்பட்டு ஊராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்ய திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இச்சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்வதற்காக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை இயக்குநர் பரிந்துரை செய்துள்ளனர் என தெரிவித்து, திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குண்டூர் மற்றும் நவல்பட்டு ஊராட்சி சாலையில் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைவதால் வருங்காலங்களில் ஏற்படும் வாகன போக்குவரத்து மற்றும் சாலையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இச்சாலையை, மாவட்ட முக்கிய சாலை வகைப்பாட்டில் சேர்த்து இச்சாலைக்கு தேசிய நெடுஞ்சாலை 210,கி.மீ.6/8–ல் பிரியும் அண்ணாநகர் சாலை கி.மீ.0/0–4/700 என்று பெயரிட்டு நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கவும் இச்சாலை மேம்பாட்டிற்காக உத்தேச மதிப்பீட்டுத் தொகையான ரூ.6.10 கோடிக்கு ஒப்புதல் வழங்குவதுடன், மேற்காணும் ஊராட்சி சாலையினை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்வதற்கான ஒப்புதலையும் வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (பொது) மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கோரியுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து அதனை ஏற்று, திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள குண்டூர் மற்றும் நவல்பட்டு ஊராட்சி சாலையில் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைவதால் வருங்காலங்களில் ஏற்படும் வாகன போக்குவரத்து மற்றும் சாலையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, மேற்காணும் ஊராட்சி சாலையினை மாவட்ட முக்கிய சாலை வகைப்பாட்டில் சேர்த்து இச்சாலைக்கு தேசிய நெடுஞ்சாலை 210, கி.மீ.6/8–ல் பிரியும் அண்ணாநகர் சாலை கி.மீ.0/0–4/700 என்று பெயரிட்டு நெடுஞ்சாலைத் துறையினரால்

பராமரிக்கவும் இச்சாலை மேம்பாட்டிற்காக உத்தேச மதிப்பீட்டுத் தொகையான ரூ.6.10 கோடிக்கு (ரூபாய் ஆறு கோடியே பத்து இலட்சம் மட்டும்) ஒப்புதல் வழங்கியும் மேற்காணும் ஊராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், 2011–2012 ஆம் ஆண்டு திருத்த வரவு – செலவு திட்டத்தில் கீழ்காணும் கணக்குத் தலைப்பில் ஒப்பளிக்கப்பட்ட தொகையிலிருந்து மேற்காணும் செலவினம் மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

3054 – சாலைகளும் பாலங்களும் – 04 – மாவட்ட சாலைகளும் ஏனைய சாலைகளும் – 337 – சாலைப் பணிகள் – 1 – திட்டத்தில் சேராதது – AA – மாவட்ட பெருஞ்சாலைகள் – சாலைப் பராமரிப்பு (முக்கியப் பிரிவு) – 18 பராமரிப்பு – 01 – குறித்த காலப் பராமரிப்பு
(த.தொ.கு.3054 – 04 – 337 – AA – 1815)

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 63679/PW1/2011, நாள் 12–12–2011 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கி.ராமச்சந்திரன்
அரசு செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு, சென்னை – 5.
மாநில கணக்காயர், சென்னை – 35/18.
மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி,
நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி) அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலரின் தனிச் செயலர், சென்னை – 9.
நிதி (பொ.ப.1) துறை, மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 9.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்